# The Personality of Venganni

**Dr. T. Manimekalai**
*Assistant Professor, Department of Advanced Tamil Studies*
*Lady Doak College, Madurai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346718

**Abstract**

*In the novel Silavum, the character Venganni is portrayed as a woman of strong personality. She challenges the traditional notion that women are only meant for cooking, managing the household, and child-rearing. Venganni demonstrates that women are capable of achieving anything, even mastering tasks traditionally done by men, such as pearl diving. She boldly questions her father about why women are not allowed to go to the sea. Her eloquence and bravery allow her to take a boat into the sea and engage in fishing, venturing into deeper waters to catch lobsters with the courage of a man. Traditionally, women in coastal communities are depicted only as performing tasks on the shore. In this novel, however, the author innovatively portrays women venturing into the sea, diving for pearls, and excelling in traditionally male activities. Venganni also exemplifies ideal womanhood in multiple dimensions: as a devoted mother, a loving partner, a loyal friend, and a respected member of her community. Scholars note that a person's personality is reflected in their confidence and ability to accomplish tasks; Venganni embodies this principle.*

***Keywords:*** *Silavum, Personality, Pearl Diving, Lobster Catching, Ancient Practices, Bravery, Coastal Life, Learning*

**Footnotes**

1. Adiththala Makal Valarvu, A. Sivasubramanian, p.15
2. tch.t.d… (details incomplete)
3. Aalumai Valarchi, Ka… (details incomplete), p.2
4. Aalumai Valarchi, p.25
5. Aalumai Valarchi, p.40
6. Mahakavi Bharathiyar: Pudhumai Penngal, p.8
7. Aalumai Valarchi, p.101
8. Aalumai Valarchi, p.58

**Supplementary References**

1. Adiththala Makal Valarvu, A. Sivasubramanian, New Century Book House, p.15
2. Aalumai Valarchi, Vizuthugal Publications, Kaarimkall, 2009
3. Mahakavi Bharathiyar: Pudhumai Penngal, Sudarsan Publications, Chennai
4. tch.t.d… (details incomplete)

# வெங்கண்ணி எனும் ஆளுமை

***முனைவர் த. மணிமேகலை***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***

*சிலாவம் நாவலில் வெங்கண்ணி எனும் கதாப்பாத்திரம் பெண் ஆளுமை நிறைந்த பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். பெண்கள் என்றால் சமையல் செய்யவும், குடும்பம் நடத்தவும், குழந்தைப் பெற்றுக்கொள்ளவும் தான் என்ற நிலையை முற்றிலும் மாற்றியவள் இவள். பெண்களாலும் எல்லாம் முடியும் என்று போராடுபவள். ஆண்கள் செய்யக்கூடிய முத்துக் குளித்தல் தொழிலைக் கூடதானும் செய்வதாகக் கூறியவள். தனது தந்தையிடம் ஏன் பெண்கள் கடலுக்குப் போகக்கூடாது என்று சண்டைப் போடுபவள். வெங்கண்ணி பேச்சாற்றல் மிகுந்தவளாகவும், கடலுக்குள் படகை இழுத்துச்சென்று மீன்பிடித்தொழில் செய்யுமளவிற்குப் பேராற்றல் படைத்தவள். நடுகடலுக்குள் சென்று சங்கெடுக்கவும், இறால்பிடிக்கவும் ஆண்களைப் போன்று தைரியமாகச் செல்பவள். பொதுவாக கடல்வாழ் மக்களில் பெண்கள் கடற்கரையிலேயே நின்று வேலைசெய்வதை மட்டுமே பார்த்திருப்போம். இந்நாவலில் புதுமையாக பெண்களைக் கடலுக்குள் செல்ல வைத்தும், முத்துக்குளிப்பதற்கு ஆசைப்படுவதாகவும் காட்டிப் புரட்சி செய்திருக்கிறார் ஆசிரியர். வெங்கண்ணிதாயிற்குத் தாயாகவும், காதலனுக்கு உற்றதுணையாகவும், தனது தோழிக்கு உறுதுணையாகவும், ஊர்ப்போற்றும் பெண்மணியாகவும் திகழ்கிறாள். ஒருவர்தனது ஆற்றலிலும் நிறைவேற்றும்திறனிலும் நம்பிக்கை கொண்டு செயற்படுவதிலிருந்து ஒருவரது ஆளுமையை அடையாளம் காணலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர். இதே அடிப்படையில் வெங்கண்ணி கதாப்பாத்திரமும் இந்நாவலில் புனையப்பட்டுள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *சிலாவம், ஆளுமை, முத்துக்குளித்தல், இறால், சங்கெடுத்தல், தொன்மம், அளம், ஆறு காட்டுத் துறை, கற்றாழை*

**முன்னுரை**

மாணிக்கம், அளம், கீதாரி, கற்றாழை உள்ளிட்ட நாவல்களை எழுதிய சு. தமிழ்ச்செல்வி ஒரு புதிய பெண்ணியம் பேசும் நாவலையும் எழுதியுள்ளார். தூத்துக்குடி மக்களின் முத்து குளித்தல் பற்றிய நிகழ்வுகளையும், கடல்வாழ் மக்களின் வாழ்வாதாரத்தையும் எடுத்துக் கூறும் ஒரு காவியம் என்றே சொல்லலாம். அந்நாவலின் பெயர் சிலாவம். இவர் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த தொன்மை கதைகளுக்கு உயிர்க் கொடுப்பவர். இவருடைய நாவலில் ஏதேனும் ஒரு சிறு தொன்மக் கதையையாவது கூறுவது இயல்பு. சங்ககாலம் முதலே ஐவகை நிலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த இலக்கியங்கள் தவிர நெய்தல் நிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதக்கூடிய ஒரு எழுத்தாளர் இவர். பல நாவல்கள் நெய்தல் நிலம் குறித்த செய்திகளைக் கூறியிருந்தாலும், நெய்தல் நில மக்களின் வாழ்க்கையை வெவ்வேறு பின்னணியில் வெவ்வேறு கதை களங்களை முன்னெடுக்கின்றார் படைப்பாளர். இவரது படைப்புகளில் எக்களத்தினைக் கூறினாலும்அதில்பெண்களின்உழைப்புக்கு முக்கியத்துவம்கொடுக்கின்றார். மாணிக்கம் நாவலில் செல்லாயி, அளம் நாவலில் சுந்தராம்பாள், ஆறு காட்டுத் துறை நாவலில் சமுத்திரவள்ளி, கற்றாழையில் மணிமேகலை, கண்ணகியில் கண்ணகி என்று இவரதுபடைப்புகளில் இடம்பெறும் பெண்களே தனித்துவம் பெறுகின்றனர்.

முத்துக்குளித் தல்தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வியலைப் பேசும் அரிய எழுத்துச்சிப்பி இந்நாவல். முத்துக்குளிப் போரின் பாடுகள், மீனவர்களின் பழக்கவழக்கம், நம்பிக்கைகள், கொண்டாட்டங்கள், மருத்துவ முறைகள், சடங்குகள் முறைகள், விழாக்கள், வாய்மொழிக்கதைகள் என வாசகரின் கைப்பிடித்துச் செல்கிறது. தாயில்லாப் பெண்டிர் மீதான தந்தையின் பாசம், மகளின் அரவணைப்பு, உறவுகளின் பாசப் போராட்டம், காதலின் வலிமை, காதலின் காத்திருப்பு, நட்பின் உன்னதம் இவற்றை அழுத்தமாகப் பேசுவதோடு கடற்கரையோர மக்களின் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் விரிவாக முன்வைக்கிறது.

இதன் தொடர்ச்சியாகவே சிலாவம் நாவலில் வெங்கண்ணி எனும் கதாப்பாத்திரத்தினைப் படைத்துள்ளார். ஒரு ஆளுமை மிகுந்த பெண் பாத்திரமாகவே வெண்கண்ணி படைக்கப்பட்டுள்ளார். ஆண்களின் பார்வையில் பெண்கள் சார்பு வாழ்க்கையே விரும்பப்படுகிறது. ஆனால் இதில் வெங்கண்ணி எனும் கதாப்பாத்திரம் தனித்துவம் மிக்க கதாப்பாத்திரமாகத் துணிச்சலான கதாப்பாத்திரமாகப் பேச்சாற்றல் வாய்ந்தவளாக இன்னும் பல ஆளுமைகள் நிறைந்த ஒரு கதாப்பாத்திரமாகப் படைத்துள்ளார் தமிழ்ச்செல்வி. இயற்கை சார்ந்த தொன்மக் கதைகளைச் செய்திகளை இவரது புதினங்களில் காணலாம். சடங்குகளையும், உண்மை நிகழ்ச்சிகளையும் கற்பனையாகக் கொண்டுதனது கதையைப் படைத்திருக்கிறார். அந்த புனைவை உறுதிப்படுத்துகிறது இந்நாவல் “அண்மை பழங்காலத்தில் நிகழ்ந்த உண்மையான நிகழ்ச்சிகளையோ கற்பனையான நிகழ்ச்சிகளையோ கருப்பொருளாகக் கொண்டு மக்கள் கூறும் கதைகளைப் பல மரபு கதைகள் ஆகும் கதைகளின் முக்கியப் பாத்திரங்கள் மனிதர்களே என்றாலும் பேய்கள் இறந்து உயிர்த்தெழுந்தவர்கள் தெய்வங்கள் புனிதர்கள் ஆகியோரும் இதில் இடம் பெறுவர்.”[1] என்று கூறுகிறார் ஆ. சிவ சுப்ரமணியன். இவை போன்ற இலக்கியங்களின் பின்னணியில் தான் சிலாவம் நாவலையும் அணுக வேண்டியிருக்கிறது.

### ஆளுமை

வேலை செய்யும் நிறுவனங்களில் மனிதவளத்தைச் சிறப்புற மேலாண்மை செய்வதற்கும் தனி மனிதர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவையான ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் ஆளுமைப் பண்பு தேவைப்படுகிறது. ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் நம்மால் முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குவது நம்மில் இருக்கும் ஆளுமையே.

### ஆளுமை விளக்கம்

ஆளுமை என்பது ஆளுமை என்னும் தமிழ்ச்சொல் பர்சனாலிட்டி (personality) என்னும் ஆங்கிலச் சொல் குறிக்கும் கருத்து ருவைக் குறிக்க ஏற்பட்டது. இலத்தீன் மொழியில் பர்சனா (persona) என்பது மறைப்பு, முகமூடி என்னும் பொருள் தருவது. எனவே ஆளுமை என்பது ஒருவர் அணிந்திருக்கும் முகமூடி என்னும் கருத்துருவின் அடிப்படையைக் கொண்டுள்ளது.[2]

### ஆளுமை என்பது

ஆளுமை என்பது “வெளித்தோற்றத் தோடோ, உடல் அமைப்போடு சம்பந்தப்பட்டது அன்று ஆளுமை என்பது ஒரு தனி மனிதனின் பண்பு மற்றும் திறனைக் குறிப்பது. இந்தப் பண்பு திறன் பல்வேறு ஆளுமைக் கூறுகளால் அல்லது பண்புக் கூறுகளால் அமைவது. இந்தப் பண்பு கூறுகள் அல்லது ஆளுமைத் திறன்கள் எவை எவை என்பதனையும் எந்த எந்த ஆளுமை திறங்கள் எந்தெந்த பணிகளுக்கு அல்லது பொறுப்புகளுக்கு முக்கியமானவை என்பதையும்

அவைகளை எப்படி வளர்த்துக் கொள்வது என்று நாம் அறிய வேண்டும்"[3] என்று கூறுகிறது.

### விடாமுயற்சி

வெங்கண்ணி தனது காதலனைக் காணவில்லை என்றவுடன் தொய்வடையாமல் எப்படியாவதுகண்டுபிடித்துவிட வேண்டும் என்று விடா முயற்சியோடு செயல்பட்டு தன் தந்தையின் மூலம் தன் காதலையும் தேடிக் கண்டுபிடித்து விடுகிறாள்.

ஒரு தலைவனுக்கு ஹிட்லரின் முடியாது என்று எதுவும் இல்லை என்ற நம்பிக்கையும் மன உறுதியும் உழைப்பு மிக அவசியம் வேண்டும் எனக்கே அடைய முடியும் என்ற நம்பிக்கையும் இந்த இலக்கை நோக்கி தன்னால் தன் குழுவை வழிநடத்திச் சென்று அடைய முடியும் என்ற நம்பிக்கையும் மிகவும் அவசியம் தனக்குள்ள இந்த தன்னம்பிக்கையையும் மன உறுதியும் தன் குழுவும் பெறச் செய்ய வேண்டும். இதுவே சிறந்த தலைவனுக்கு அழகு இந்த தன்னம்பிக்கையோடு இலக்கை அடைய விடாமுயற்சியும் உழைப்பு மிக அவசியமான ஒன்று"[4]. அதில் கூறிய படி நம்பிக்கையோடு செயல்படுகிறாள்.

### பலவீனங்களை அறிதலும் களைதலும்

தனது பலவீனம் தனது தந்தையும், காதலனும் தான் ஆனால் அதனால் எவ்வித இடையூறும் வராமல் இருவருக்குமிடையே சிக்கல் வராமல் பாதுகாத்துக் கொள்கிறாள் "தோல்விகளையும் பட்டியலிடுங்கள் இது விதி எனக்கு எழுதப்பட்டது இதுதான் என்ற அவ நம்பிக்கைகளைத் தூக்கி தூரம் எறிந்து ஒவ்வொரு தோல்விக்கும் என்ன என்ன காரணங்கள் என்று பட்டியலிட்டு அதை எப்படி தவிர்ப்பது என்று சிந்தியுங்கள் அதற்கு உழையுங்கள் வெற்றியும் வெற்றி பெற பெரும் திறனும் உங்களை வந்தடையும் நம்புங்கள் நம்பினால் தான் வாழ்க்கை"[5] இதில் வெங்கண்ணி தனது பலவீனத்தைத் தூக்கியெறிந்து விட்டு தைரியத்தோடு செயல்படுகிறாள்,

சிலாவம் முத்துக்குளிப்புத் தொழிலில் ஈடுபடக்கூடிய மீனவர்களின் வாழ்க்கையைக் குறித்து எழுதப்பட்ட நாவல் என்று தோன்றினாலும் இந்நாவல் தூத்துக்குடி அருகிலுள்ள முயல் தீவு என்ற பகுதியில் வழங்கப்படும் பழ மரபுக் கதையைப் புனைவு செய்திருக்கிறது. தொன்மக் கதையைப் புடைமாக்குவதற்கு ஆசிரியருக்குச் சில கதாப்பாத்திரங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. ஆதலால் வெங்கண்ணி, சடையன், அன்னம்மாள், இசக்கிமுத்து, பேத்தை, முருகன், வீரையன், சின்ன கருப்பன், முத்துமாரி உள்ளிட்டவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார். கிராமப்புற மக்களிடம் எண்ணற்ற பழங்கதைகளும், நம்பிக்கைகளும், சடங்குகளும் கொட்டி கிடக்கின்றன அந்த கதைகள் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிக் கிடக்கின்றன. அவற்றோடு பண்பாட்டுடன் சடங்குகளும் கலந்தவையாக காணப்படுகின்றன. இந்நாவலிலும் முத்துராசா இளவரசி கதையும் அதே போன்றவை. அந்தப் புனைவு கதைக்கு ஆன்மா கொடுக்கும் விதமாகப் பெண் கல்வி கதாப்பாத்திரமும் இசக்கிமுத்து கதாப்பாத்திரமும் படைக்கப்பட்டுள்ளது. இன்று வரை நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுள் இவையும் ஒன்று சிலாவம் நாவல் இந்த நம்பிக்கை களுக்கெல்லாம் மேலும் வலுசேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது.

### வெங்கண்ணிஎனும் ஆளுமை

தூத்துக்குடி மாவட்டத்தில் கடற்கரையில் ஓரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சடையன் அன்னம்மாள் இருவருக்கும் இலங்கைத் தீவில் குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டவள் வெங்கண்ணி சடையனின் மனைவி இறப்பிற்குப் பிறகு சடையனுக்குத் தாய்க்குத்

தாயாகவும், மகளுக்கு மகளாகவும் பாது காப்பாகவும், ஆதரவாகவும் பார்த்துக் கொண்டிருப்பவள். இவ்விரு கதாப்பாத்திரங்களும் இந்நாவலுக்கு வலு சேர்க்கின்றன. தந்தையும் மகளும் இப்படி தான் இருக்க வேண்டும் என்று சான்று காட்டக்கூடிய அளவில் இருவருடைய கதாப்பாத்திரமும் அமைக்கப்பட்டது மற்ற பெண்களும் ஊராரும் இவர்களைப் பார்த்து பொறாமைப்படக் கூடிய அளவில் இவர்களுடைய அன்பின் பிணைப்பு நம்மை குளிரச் செய்கிறது. வெங்கண்ணி எனும் கதாப்பாத்திரம் வலிமை மிகுந்த ஆழமான ஒரு பாத்திரம் ஆண்களுக்கு நிகராக கடலுக்குள் சென்று மீன் பிடித் தொழிலைச் செய்யக்கூடிய வலுப்பெற்ற பாத்திரம் மீன் பிடித் தொழில் மட்டும் அல்லாது முத்து குளிக்க வேண்டும் என்ற எண்ணமும் உண்டு. தனது தந்தையிடம் தானும் முத்து குளிக்கச் செல்வதாகவும் அதற்கு அனுமதி தர வேண்டும் என்றும் பலமுறை கேட்கக் கூடிய இடங்களைப் பார்க்க முடியும் இது வரை அனைத்து விதமான நாவல்களிலும் இலக்கியங்களிலும் மீனவப் பெண்கள் கடற்கரை அளவிலே மட்டுமே நின்று கொண்டிருப்பர். ஆனால் இந்நாவல் அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக உள்ளது. இவள் கடலுக்குள் மீன் பிடிக்கவும் முத்துக் குளிக்கவும் தயாராக இருக்கிறாள். ஒரு ஆண் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் செய்யக்கூடிய திடமான ஒரு பெண் பேச்சாற்றலும் மிக்கவள் யாராக இருந்தாலும் நியாயமாகப் பேசக்கூடியவளும், தைரியமாகப் பேசக் கூடியவளும் வெண்கண்ணி கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. பரதவர் குலத்தில் அன்றாட வாழ்க்கையில் மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட பெண்களின் இருப்பை ஆவணப்படுத்துவதற்காகவே கதாப்பாத் திரத்தைப் படைத்துள்ளார் ஆசிரியர். இந்நாவலில் முனியசாமி எனும் கடவுள் கதாப்பாத்திரம் வெங்கண்ணின் ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு உறுதுணையாய் அமைகிறது. கதையின் போக்கிற்கேற்ப நம்மோடு உடன் வந்து கொண்டேயிருக்கிறது.

### கடல் தாயும் வெங்கண்ணியும்

வெங்கண்ணியின் ஆளுமையின் சிறப்பம்சம் அவள் கடலோடு கொண்ட உறவு கடல்வெறும் வாழ்வல்ல. அவள் வாழ்க்கையோடு இணைந்த ஒன்று. தனது உறவுகளிடம் பகிர்ந்து கொள்வது போன்றே கடலுடன் தனது குறைகளையும், பிரச்சினைகளையும் பரிமாறிக் கொள்ளும் பெண்ணாக்க் காட்டப்படுகிறாள். கடலில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் இயல்பானவை. இச்சீற்றங்களை விட மனித மனதில் ஏற்படும் சீற்றங்கள். இதற்கு கடல் வடிகாலாக இருக்கின்றது. வெங்கண்ணி எனும் கதாப்பாத்திரம் இன்பமானாலும் துன்பமானாலும் கடலுக்குள் சென்று அனுபவிப்பதே அவரது பழக்கமாக உள்ளது. தனது துக்கமானாலும் மன வருத்தமானாலும், இன்பமானாலும், தனது தந்தையிடம் இயல்பாகப் பேசுவதற்குக் கடலே உதவுகிறது. அன்றாடம்நாம்பயன்படுத்தும்வாகனங்கள் போன்று பரதவர்கள் மரக்கலத்தைத் தள்ளிக் கொண்டு கடலுக்குள் செல்வதைக் காண முடிகிறது. தங்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக கடல் இருக்கிறது. அந்நம்பிக்கையே அவர்களை வாழச் செய்கிறது. இந்நாவல் பல இடங்களில் இவள் கடலோடு பேசுவதைச் சுட்டிக்காட்டிகிறது. தனது துக்கங்களை எல்லாம் பகிர்ந்து கொள்ளும் தாயாகத் தோழியாகக் கடலை உருவகித்துக் கொள்கிறாள். தங்களுக்கு ஏற்படும் மனக்குமுறலின் போது மன அமைதி தருவது மனதைச் சாந்தப்படுத்துவது கடல் மட்டுமே என்று நம்புகின்றனர்.

**வெங்கண்ணியைப் புரிந்து கொண்ட இரு ஆண்கள்**

ஆசிரியர் ஒரு ஆண் எப்படி இருக்க வேண்டும் என்ற சமூகத்தின் ஆசையை இந்நாவலில் பதிவு செய்கிறார். வெங்கண்ணிக்குப் புரிந்து கொண்ட தந்தை சடையனும் தன்னைப் பற்றி தனது ஆசைகளையும், விருப்பங்களையும் தெரிந்து கொண்ட கணவன் இசக்கி முத்துவும் கிடைத்திருப்பது பெரும் பேறு. ஆண்களைப் போன்று முத்துக் குளிக்கவும், சங்கெடுக்கவும் இவள் ஆசைப்படுகிறாள் அதனைக் கண்ட தந்தை உனது ஆடைகள் இதற்கு ஒத்து வராது என்று எடுத்துக் கூறுகிறார். தனது மகளின் ஆசையை நிறைவேற்றுவதில் இவருக்கு நிகர் இவர்தான். தனது மகள் ஒருவனைக் காதலிக்கிறாள் எனும் பொழுது அதனைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறார் இவரே. எப்படியாவது அவனை இவளுக்கே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று போராடி மனம் முடித்து வைக்கிறார். அதுவும் எவ்வித பிரச்சினையும் வராதபடி பார்த்துப் பார்த்து செய்கிறார். தனது மகளுக்காகவே அவளது தோழியான பேத்தையை ஆதரிக்கிறார். தனது மகளைப் போலவே அப்பெண்ணையும் பாதுகாக்கிறார் மணமும் முடித்து வைக்கிறார். கணவன் இசக்கி முத்துவும் இவ்வளவு விருப்பங்களை விடாது நிறைவேற்றுகிறான் இவள் சொன்னால் சரியாக தான் இருக்கும் என்று இருவரும் நம்புகின்றனர் அதை கடைபிடிக்கவும் செய்கின்றனர் எனும் பொழுது வெங்கண்ணி எனும் ஆளுமை நம்மை கவனிக்க வைக்கிறதுஆச்சிரியப்பட வைக்கிறது.

**மனித நேயம்போற்றும் ஆளுமை**

வெங்கண்ணியின் மனம் தன்னைச் சுற்றி உள்ளவர்களை அரவணைப்பதிலும், அவர்களின் துயரங்களைப் போக்குவதிலும் முனைப்பாக இருக்கிறாள் தனது தோழி பேத்தையின் தந்தை ஊதாரியாக இருப்பதைக் கண்டு மனம் வருந்துகின்றாள் அவர்களுக்காகப்போராடும்தன்மைநம்மை நேசிக்க வைக்கிறது. இவளது அக்கறையும் பிறர் மீதான அன்பும் இக்கதாப்பாத்திரத்திற்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது. ஒருவேளை சாப்பாட்டிற்காக கஷ்டப்படும் தனது தோழியை உயர்த்துகின்றாள். அவளது நிலை கண்டு வருந்துகின்றாள் உதவியும் செய்கின்றாள் தனது தந்தையின் மூலமாக அவளுக்கும் திருமண ஏற்பாடுகள் செய்து தனது திருமணத்தை போலவே செய்தும் காட்டுகின்றாள். சரியான நேரத்தில் சரியான மாப்பிள்ளையைக் கண்டுபிடித்து அவளுக்காகப் பேசி மணமுடித்து வைக்கின்றாள் இவள் மட்டும் இவ்வாறு செய்யவில்லை எனில் பாவப்பட்ட பேத்தை கடைசிவரை ஆதரவில்லாமல் கன்னியாகவே வாழ்ந்து தனது வாழ்க்கையை முடித்து இருப்பாள். பேத்தையின் மாமியார் முருகனின் தாயாரையும் ஆதரித்து மூன்று வேளை உணவு கொடுத்து சுகவீனமாக இருக்கும் அவளைப் பார்த்துக் கொள்ளவும் செய்கிறாள். தனது தோழிக்குத் தனது சக்திக்கு மீறிய உதவிகளைச் செய்து அவளையும் இச்சமூகத்தில் உயர்ந்த ஒரு நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்கின்றாள் முயற்சியில் வெற்றியும் அடைகிறாள். அன்றாட வாழ்வில் பிரச்சினைகள் சமூகக் கட்டுப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள், பாசப் போராட்டம் இவை அனைத்தையும் தாங்கும், ஏற்றுக் கொள்ளும் இதயம் படைத்தவள். இதுவே அவளைத் தவிர்க்கமுடியாத ஆளுமையாக மாற்றுகிறது.

**சுயமரியாதையின் மறுஉருவம்**

வெங்கண்ணி சுயமரியாதை உடைய ஒரு பெண். அவள் தனது வாழ்வின் வழிமுறைகளால் நெறிமுறைப்படுத்தப்பட்ட ஒரு சமூக ஒழுக்கத்தோடு வாழக்கூடிய பெண்ணாக இருக்கிறாள். கடலுக்குள் செல்லும் உரிமையை விட மறுக்கிறாள். ஆண்கள்

தான் போக வேண்டுமா பெண்கள் போக கூடாதா எனும் பொழுது கோபம் கொள்கிறாள். அதை மீறியும் கடலுக்குள் சென்று மீன் பிடித்தும் சங்குகள் எடுத்தும் வருகிறாள். பெண்களின் உரிமையை விட்டுக் கொடுப்பதில் அவளுக்கு விருப்பமில்லை இச்சமூகத்தில் குடும்பம் சமூகம் கட்டுப்பாடுகள் என்று சிக்கிய பெண்களின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள். மற்ற பெண்களைப் போல் வீட்டிலேயே அடங்கிக் கிடக்காமல் ஆண்களுக்கு நிகராக கடலுக்குள் சென்று வருவதற்குப் போராடுகிறாள் செய்தும் காட்டுகிறாள். காதலிலும் இசக்கி முத்துவிடமும் அவனது குடும்பத்திடமும் தன் சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாள். அவர்களிடம் மட்டும் அல்லாது மற்ற யாரும் பெண் என்று அவமதிப்பதை இவளால் பொறுக்க முடியவில்லை. பெண் என்பதாலேயே பின் தள்ளப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறாள். இது பெண்களின் சுயமரியாதையை உரிமையை போற்றும் விதமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சமூகத்தில் சுயமரியாதையோடு செயல்படும் பெண்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் காட்டுகின்றன.

## ஆசிரியர் எதிர்பார்க்கும் பெண்

இலக்கியங்களில் இதுவரை காட்டப்பட்ட பெண்களில் புது விதமாக சித்திரிக்கப்படுகிறாள் இவள். இதுவரை பெண் என்பவள் பணிவானவள் அன்பானவள் கட்டுப்பட்டவள் தாழ்மையானவள் என்று தான் உருவகிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் இதில் முற்றிலும் வேறாக தைரியமானவளாக போராளியாக அன்பானவளாக துணிச்சலானவர்களாகக் காட்டப்படுகிறாள். கடலிடம் கோபப்படும் பெண்ணாகவும் சாந்தப்படும் பெண்ணாகவும் கடலை நேசிக்கக் கூடியவளாகவும் திட்டக் கூடியவளாகவும் கடலிடம் தோழியிடம் பேசுவது போல் உரையாடுபவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். இந்நாவலில் ஆசிரியர் தான் கண்ட பாரதி போற்றும் புதுமைப் பெண்ணாக வெங்கணியைப் போற்றுகின்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,

***நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் உதய கன்ன உரைப்பது கேட்டிரோ! - மகாகவி பாரதியார்[6]***

பாரதி போற்றும் பெண்ணாகத் திகழ்கிறாள்.

## கட்டிக் காக்கும் காதல்

வெண்கண்ணி இசக்கி முத்து மீது வைத்திருக்கும் காதலானது சாதாரணமாக சமூகத்தில் நடைபெறும் இரு காதலர்களிடையே நடக்கும் காதல் அல்ல. வாழ்க்கையின் தத்துவத்தையும், மகத்துவத்தையும் புரிந்து கொண்ட காதல். தனது காதலனை மனதால் நினைத்தும் சில நேரங்களில் நேரில் பார்த்தும் காதலிக்கிறாள். இளம் காதலர்களைப் போல பார்க்கவும், பேசவும், பல இடங்களுக்குச் செல்லவும், பல பொருள்களை வாங்கவும், ஆசைப்படும் காதல் அல்ல. உயிருக்குப் போராடிய வெண்கண்ணியைக் கடலில் காப்பாற்றிய மறுகணமே இசக்கி முத்து மீது இவளுக்குக் காதல் பிறக்கிறது. தன்னைக் காப்பாற்றிய அன்றைய நாள் முதல் அவனைத் தன் கணவனாக மனதில் வறித்துக் கொண்டாள். அவனுக்காகத் தன் உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறாள். அவன் தனது குடும்பத்தினரால் அவமதிக்கப்பட்டு ஊரை விட்டு ஓடிப் போய் விடுகிறான். தனது காதலியைப் பிரிந்து சென்று விடுகிறான். ஆனால் அவளைப் பற்றியும், அவளது நினைவையும் அவனால் மாற்றவும் முடியவில்லை, மறக்கவும் முடியவில்லை. எப்பொழுதும் வெங்கண்ணியை நினைத்துக் கொண்டே வாழ்கிறாள். வெங்கண்ணி இசக்கி முத்துவின் காதல் மனரீதியாக

ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு வேறு வேறு இடங்களில் இருந்தாலும் இருவரின் மனமும் ஒன்றாகவே யோசிக்கிறது. எப்பொழுது தனது காதலனைக் காதலையும் காண்போம் என்ற ஏக்கத்திலேயே வாழ்கின்றனர். ஊரை விட்டு ஓடிய தனது காதலனை எப்படியாவது கண்டுபிடித்து அவனுக்கென்று ஒரு கப்பலை வாங்கிக் கொடுத்து தன் காதலனைப் பொருளாதாரத்தில் முன்னேற்றி விடுவோம் என்று நினைக்கிறாள்.

தனது தந்தை சடையனிடமும் தனது எண்ணத்தைக் கூறுகின்றாள். அவரும் தனது மகளுக்காக மருமகனுக்குக் கப்பலை வாங்கிக் கொடுக்க முயற்சி செய்கிறார் வாங்கியும் கொடுக்கிறார். இதில் வெங்கண்ணியின் ஆழமானகாதல் புலப்படுகிறது. தனது காதலனுக்காகவே காத்துக் கொண்டிருக்கிறாள். பல நாட்களாக அவன் வரவில்லை என்றாலும் அவன் உயிரோடு எங்கோ இருக்கிறான் என்று முழுமையாக நம்புகிறாள். தன் காதலுக்கு அவனைத் திருப்பிக் கொண்டு வரும் சக்தி உண்டு என்று உறுதியோடு நம்புகிறாள். தனது தந்தையிடமும் தன் காதலைப் பற்றி முழுவதுமாக சொல்லவில்லை என்றாலும் காதல் பற்றிய ஏக்கத்தை காதலனைப் பற்றிய இயக்கத்தைச் சொல்லத் தயங்குகின்றாள். ஆனாலும் சடையன் புரிந்துக் கொண்டு தேடிக் கண்டுபிடித்து தன் மகளிடம் ஒப்படைக்கின்றான். தன் மகளுக்குத் தன் மகளின் தன்மானத்திற்கும் எந்த விதமான பங்கமும் வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார் அவளும் தனது தந்தைக்கு எந்த விதமான அவப்பெயரும் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறாள். இசக்கிமுத்துவின் தாய் தகப்பனுக்கும் இல்லாத ஒரு நம்பிக்கை வெண்கண்ணிக்கு அவன் மீது உண்டு. இது அவர்களின் ஆழமான காதலையே காட்டுகிறது.

**உருவாக்கும் திறன்**

இவள் தனது தந்தையையும் தன் காதலனையும் இவ்வுலகம் போற்றும் விதமாக உருவாக்குகிறாள். தந்தைக்கு தேவையான அறிவுரைகளையும் தனது காதலனுக்குத் தேவையான ஆலோசனைகளையும் கொடுக்கிறாள். “பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் பாயும் மீன்தனில் படகினைக் கண்டான் என்ற கண்ணதாசனின் வரிகளில் மனதைப் பறி கொடுப்பவன் நான். பறவைகளும் பிராணிகளும் இந்த வகையில் நமக்கு பாடங்களே”[7] வெறும் பாடலாக இசையாக பலர் ரசித்த இந்த திரைப்பட பாடலுக்குள் தன் வாழ்க்கையைச் சிந்திக்கின்றார். திரு நல்லி குப்புசாமி அவர்கள் இதற்கு காரணம் பாடல் என்ற எல்லை தாண்டி பாடலின் கருத்தை இவர் சிந்தித்தது தான். அதே போன்றே இவளது உயர்ந்த சிந்தனையும் உயர்வாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் வெங்கண்ணியிடம் இருப்பதை அறிய முடிகிறது.

**வெங்கண்ணிக்கும் சடையனுக்குமுள்ள உறவு**

தாயிக்கும் மகனுக்குமான உறவு தான் இவர்கள் இருவருக்கும். தனது தந்தையைத் தன் குழந்தையைப் பாதுகாப்பது போலவே பார்த்துக் கொள்கிறாள். சடையனைக் கடலுக்கு அனுப்ப முடியாது என்று கூறும் பொழுதும் அவரின் உடல்நிலையைக் குறித்துக் கவலைப்படும் நேரத்திலும் ஒரு தாயைப் போலத் தெரிகிறாள். சடையனுக்கு உடல்நிலை சரியில்லாமல் படுத்தப் படுக்கையாக இருக்கும் பொழுது கூட மிகவும் வருந்துகிறாள். சாப்பாடு ஊட்டுவது முதல் கழிவறைக்கு அழைத்துச் செல்வது வரை அனைத்தும் செய்கிறாள். சடையனுக்கு வெங்கண்ணி தாயாகவே காட்சியளிக்கிறாள். சடையனின் வாழ்வில் மூன்று பெண்களின் பங்கு இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார். தனது தாய் தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கினார். தனது மனைவி தனது

கௌரவத்தைத் கட்டிக் காப்பாற்றினாள். தனது மகள் இரண்டையும் செய்கிறாள் என்று பெருமிதம் அடைகிறார். வெங்கண்ணிக்குத் தனது தந்தை என்றால் உயிர் தனக்கு எல்லாமுமாக இருப்பதாக நினைக்கிறார். அவரும் தனது வாழ்க்கையே தன் மகளுக்காகத் தான் என்று வாழ்கிறார். எந்தத் தந்தை மகளுக்கு மில்லாத பிணைப்பு, இணைப்பும் இருப்பதை ஆசிரியர் சுட்டிச் செல்கிறார்.

## வெங்கண்ணி எனும் போராளி

வெங்கண்ணியின் வாழ்க்கையானது காதலாகட்டும் வாழ்க்கை ஆகட்டும் போராட்டம் நிறைந்ததாகவே இருக்கிறது. காதலுக்காகவும், வாழ்க்கைக்காகவும் போராடிக் கொண்டே இருக்கிறாள். தனது காதலைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடும் ஒரு போராட்டக் காரியாகவே திகழ்கின்றாள். இலங்கையில் சிலாவம் எனும் இடத்தில் இவள் கடற்கரையில் சடையனால் கண்டெடுக்கப்படுகிறாள்[8] கடவுள் கொடுத்த குழந்தையாகவே கருதி சடையனும் அன்னம்மாளும் வளர்க்க ஆசைப்படுகின்றனர். வளர்த்து பருவப் பெண்ணாகவும் சமூகத்தில் நிலைத்து வாழக் காரணமாகின்றனர். பிறந்தது முதல் போராட்டமான வாழ்க்கையை வாழ்கின்றாள் வெங்கண்ணி. இவர்கள் வாழக்கூடிய சமூகம் காதலை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் பணத்தின் அடிப்படையில் உயர்ந்தவர்களைத் திருமணம் செய்வது தங்களது கௌரவமாகக் கருதக்கூடிய சூழலில் வாழ்கின்றனர். தங்களது சொந்தத்திலேயே திருமணம் செய்து வைக்கக் கூடிய மரபும் அவர்களிடையே இருப்பதைக் காண முடிகிறது. அதனாலேயே இசக்கி முத்துவை அவரது அக்காவின் மகளோடு நிச்சயிக்கப்படுகிறது அதைக் கண்டு வெறுத்து ஊரை விட்டு ஓடிப் போய் விடுகிறான். அதை அறிந்து அவன் மீது கோபமாக இருந்தாலும் அவனை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்று போராடும் போராளியாகவே காட்சி அளிக்கிறாள். அவனுக்காகத் தனது காதலுக்காகப் போராட்டமான வாழ்க்கையை எதிர்கொள்கிறாள். அவனைக் காப்பாற்றுவது மட்டுமல்லாது. அவன் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறாள். அதற்கு தனது தந்தையுடன் சேர்ந்து இருவருமாக நிலைத்து வாழப் போராடி வெற்றியும் அடைகின்றனர். இது அவனுடைய போராட்டக் குணத்தையும் எப்படியாவது வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற ஆவலையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுவதாகஅமைகிறது. ஆசிரியர் இப்பாத்திரத்தை வலிமையான ஒரு கதாப்பாத்திரமாகவே படைத்துள்ளார். கடற்கரையில் வாழும் மக்களின் 4 வாழ்க்கை இயற்கையின் கருணையாலும் இயற்கைச் சீற்றத்தாலும் ஆகியது. இதனை எதிர்த்து நிற்கும் வலிமையான பெண்ணாகவே வெங்கண்ணி சித்திரிக்கப்பட்டுள்ளாள். பாசத்தைத் தாங்கும் தாய்மையாக இருக்கிறாள். அதே சமயம் நியாயங்களுக்காக எதிர்த்துப் போராடும் புரட்சிப் பெண்ணாகவும் காட்சியளிக்கிறாள்.

## பழகு திறன்

வெங்கண்ணி அனைவரிடமும் இயல்பாகப் பழகக் கூடியவள். இவளது பேச்சில் அனைவரும் மயங்கி விடுவர். அன்பாகவும், அனுசரணையாகவும் பேசக் கூடியவள். "பழகு திறன் அல்லது உறவு திறன் என்பது ஒரு குழு அல்லது கூட்டத்தில் ஒரு உறுப்பினராக நாம் ஏற்படுத்திக் கொள்ளும் உறவையும் அது சார்ந்த திறமையும் குறிக்கிறது. தனிமரம் தோப்பாகாது என்பார்கள். நாம் ஒரு குழுவாக குடும்பமாக அல்லது சமூகமாக கூடித்தான் வாழ வேண்டும் வாழ முடியும். இறைவன் நமக்கு மேல் உள்ளவர்கள் மட்டுமல்ல நமக்கு கீழ்

உள்ளவர்கள் நமக்கு சமமாக உள்ளவர்கள் என்ற அனைவரிடமும் சமூகமான உறவு ஏற்படுத்திக் கொள்ளும் திறன் நமக்கு வேண்டும்"[8] என்பது போல இருக்கும் உறவுகளை நேசிக்கக் கூடியவள். தனது தோழியையும் அவளது குடும்பத்தையும் தன் குடும்பமாக நினைப்பவள்.

## முடிவுரை

வெங்கண்ணியின் ஆளுமைகள் சிலாவம் நாவலின் அடித்தளமாக அமைகிறது. இந்நாவலுக்கு வலுசேர்க்கும் ஒரு பாத்திரம். இவள் சமூகப் போராளி, இயற்கை நேசிப்பாளி, மனித உறவுகளின் நேசிப்பாளர். இவளது வாழ்வு இன்பமும், துன்பமும் நிறைந்த வாழ்க்கையாகயிருந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு செவ்வனே தனது வாழ்க்கையை வாழப் பழகுகிறாள். வெங்கண்ணி ஒரு பெண்பாத்திரம் மட்டுமல்ல தத்துவவாதியும் கூட. பெண்ணிற்கே உரிய பண்புகளோடு சமூகப் போராளியாகவும் சுயமரியாதையோடு வாழ்பவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். தனது காதலுக்காக காத்திருந்து அவனையும் உயர்த்தி அழகு பார்க்கும் காதலி. தனது தந்தைக்கு நல்லதொருமகளாகவும் இருக்கிறாள். நட்பிற்கு இலக்கணம் இவளே என்று கூறலாம். இவளைப் போல இன்றையச் சூழலில் பல பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். துன்பத்தோடு ஆனால் இவள் அனைத்துப் பிரச்சினைகளையும் கட்டுடைத்து மகிழ்ச்சியாக வாழக்கற்றுக் கொண்டிருக்கிறாள். மற்ற இலக்கியங்களில் காட்டப்படாத பாத்திரமாக ஆசிரியர் இப்பாத்திரத்தைப் படைத்துள்ளது பெருமைக்குரியதே.

## அடிக்குறிப்புகள்

1. அடித்தள மக்கள் வரலாறு, ஆ.சிவ சுப்பிரமணியன், பக். 15
2. ta.m.wikipedia.org
3. ஆளுமைவளாச்சி, காரைமைந்தன், ப.2.
4. ஆளுமைவளாச்சி, காரைமைந்தன், ப.25.
5. ஆளுமைவளாச்சி, காரைமைந்தன், ப.40.
6. மகாகவி பாரதியார், புதுமைப் பெண்கள், செய்யுள். 8.
7. ஆளுமை வளாச்சி, காரைமைந்தன், ப.101.
8. ஆளுமை வளாச்சி, காரைமைந்தன், ப.58.

## துணைநூல்கள்

1. அடித்தள மக்கள் வரலாறு, ஆ. சிவ சுப்பிரமணியன், நியூசெஞ்சி புக் ஹவுஸ், பக். 15
2. ஆளுமை வளாச்சி, காரைமைந்தன், விழுதுகள் வெளியீடு, காரைக்கால், 2009.
3. மகாகவி பாரதியார், புதுமைப் பெண்கள், சுதர்ஸன்பதிப்பகம், சென்னை.
4. ta.m.wikipedia.org